[1975 எப்ரல் 19

Liberalised Pension Rules.

*252 Q.—Thiru K.S. GANAPATHI and Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to L.C. Starred Question No. 282, on 9—4—1974—

(*a*) whether the Government have arrived at any decision in the matter of extending the revised pension rules applicable to the teachers of Aided High Schools from 1—6—1970, to the non-teaching staff of such schools, who retired prior to 1—4—1972; and

(*b*) if so, the details thereof?

தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள்.

திருவாளர்கள் கே. எஸ். கணபதி, & பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 9—4—1974 அன்று 282 ஆம் எண் உடுக்குறியிட்ட வினவுக்கு அளித்த விடையையொட்டி, கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேரும்—

(அ) மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு 1—6—1970 முதற்கொண்டு பொருந்தக்கூடிய புதிய ஓய்வூதிய விதிகளை அத்தகைய பள்ளிகளில் பணியாற்றி 1—4—1972-க்கு முன்னர் ஓய்வு பெற்ற ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் நீட்டிப்பது குறித்து அரசு ஏதேனும் முடிவெடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டதும், தனியார் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஓய்வூதியச் சலுகையானது அரசு ஊழியர்களுக்கு அளிப்பது போலவே 1—6—1970 முதற்கொண்டு கொடுக்கப்பட்டது. ஆனல் அதே பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்கள் அல்லாத மற்ற பணியாளர்களுக்கு 1—4—1972 முதற்கொண்டுதான் கொடுக்கப்படுகிறது. இந்த வேறுபாட்டை அகற்ற அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். அது சம்பந்தமான முழு விவரத்தையும் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களிடமிருந்து அரசு பெற்றிருக்கிறது. அதை அரசு ஆராய்ந்து வருகிறது. இறுதி முடிவு எடுக்கப்படும்.